**<u>01.07.2024 முதல் 31.12.2024 வரை ஆறு மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay Authorization for the month of July 2024 to December 2024)</u>**

**பள்ளிக் கல்வித் துறை**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை – 600 009.**

**<u>கடித எண்.efile/6736/பக.7(1)/2024 – 1, நாள்.30-07-2024</u>**

**அனுப்புநர்**
**திருமதி.சோ.மதுமதி, இ.ஆ.ப.,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**
**மாநில தலைமைக் கணக்காயர், சென்னை – 18/35(இ)**
**முதன்மைச் செயலர்/கருவூல கணக்கு ஆணையர், சென்னை-15(இ)**
**அனைத்து மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்(இ)**
**அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்(இ)**
**சார் சம்பளக் கணக்கு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை – 03. (இ)**

**ஐயா,**

**பொருள்:** **பள்ளிக் கல்வி – மேல்நிலைப் பள்ளி – கணினி பயிற்றுநர் நிலை-I & II, 1880 தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது – 01.07.2024 முதல் 31.12.2024 வரை 6 மாத காலத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

**பார்வை :**
1. **அரசாணை நிலை எண்.187 பள்ளிக் கல்வி (மேநிக-2) துறை, நாள்.04.10.2006**
2. **அரசு கடித எண். efile/615/பக.7(1)/2024, நாள்.02.02.2024.**
3. **பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 000814 / எல்3 / 2020, நாள். 02.07.2024.**

-------

**பார்வை 1-இல் காணும் அரசாணையில் தமிழகத்தில் உள்ள அரசு, நகராட்சி மற்றும் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கணினி கல்வித் திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தும் பொருட்டு தற்காலிகமாக 1880 கணினி பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்காண் பணியிடங்களுக்கு பணியிடத் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு வந்த நிலையில், இறுதியாக கடந்த ஜனவரி 2024 முதல் ஜூன் 2024 முடிய ஆறு மாத காலத்திற்கு பார்வை 2-ல் காணும் அரசு கடிதத்தின் வாயிலாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்பட்டது.**

**2. பார்வை 3-ல் காணும் கடிதத்தில், மேற்காண் 1880 தற்காலிக கணினி பயிற்றுநர் நிலை-I & II பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட பணியிடத் தொடர் நீட்டிப்பு ஜூன் 2024 அன்றுடன் 01.07.2024 முதல் 31.12.2024 வரை ஆறு மாதங்களுக்கு ஊதிய**

கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட நிலையில் தற்காலிக பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக ஈர்த்துக்கொள்வது தொடர்பான கருத்துரு தற்போது பரிசீலனையில் இருப்பதால் பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று பள்ளிக் கல்வி இயக்கத்தில் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட இக்கடிதத்தின் இணைப்பில் உள்ள 1880 கணினி பயிற்றுநர் நிலை– I மற்றும் II பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 31.12.2024 முடிய ஆறு மாத காலத்திற்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay authorization) வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்கண்ட பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 31.12.2024 முடிய ஆறு மாத காலத்திற்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

30-7-2024

அரசு செயலாளருக்காக

நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6. (கு)

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் (கு)

இருப்புக் கோப்பு/ உதிரி நகல்